International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# இமையம் செல்லாதபணம் கிராம வாழ்க்கைச் சித்தரிப்பு

**வெ. நித்யா,** முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் ச. பிரியா,** உதவிப் பேராசிரியர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
அரசு கலைக்கல்லூரி, பு.முட்லூர், சிதம்பரம்.

**ஆய்வுச்சுருக்கம்**

**'செல்லாதபணம்'** என்ற நாவல் கிராமத்தில் உள்ள மக்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டுள்ளது. அங்கு வாழும் மக்களிடையே நிகழக்கூடிய சாதி சமய , வறுமை, பணத்தின் ஆதிக்கத்தால் சிலையை குடும்ப உறவுகள், காதலின் நிலை, மனித அவலங்கள், வர்க்க வேறுபாடு ஆகியவற்றை மையமாகக் கொண்ட இலக்கிய படைப்பாகும். இந்நாவலில் வரும் ரேவதி தன் தந்தையின் பேச்சை கேட்காமல் மீறித் திருமணம் செய்ததால் இவளை சேர்ந்துக் கொள்ள மறுத்தார். தான் தன் தந்தையை மீறித் திருமணம் செய்தாலும், நாம் படித்திருக்கிறோம் வேலைக்கு சென்று நன்றாக வாழாமல் என மன உறுதியுடன் இருந்தாள். ஆனால் அவன் நினைத்தது போல் வாழ முடியாமல் கணவனின் அடி ,உதை , கடன் பிரச்சனை என பல துன்பங்களை அனுபவிக்கிறாள். ரேவதி ஒரு கட்டத்திற்கு மேல் வாழ்க்கையை வெறுத்து தீக்குளித்து விடுகிறாள். இதை அறிந்த அவள் குடும்பத்தார் தன்னிடம் உள்ள பணம், நகை, சொத்து எல்லாவற்றையும் கொடுத்து அவளை காப்பாற்ற நினைத்தார்கள். ஆனால் அப்பொழுது அந்த பணத்தால் ரேவதியின் உயிரை காப்பாற்ற முடியவில்லை. காலம் கடந்து செல்லும் எந்த உதவியும் பயனிருக்காது. ரேவதி. உயிரோடு இருக்கும் போது இந்த பணத்தையும், நகையை கொடுத்திருந்தால் அவளுக்கு உதவியாக இருந்திருக்கும். தற்போது அந்த பணம் **'செல்லாதபணம்'** என்பதை இந்நாவல் நமக்கு எடுத்துரைக்கிறது.

**முதன்மைச் சொற்கள்:** கிராம வாழ்க்கை, குடும்பச்சூழல், வறுமை, காதல் நிலை

**முன்னுரை**

தமிழ் நவீன இலக்கியங்களில் சமூக எதார்த்தத்தை. மையமாகக் கொண்டது இந்நாவலாகும். இதில கிராம வாழ்க்கையின் பல்வேறு பரிமாணங்களை. பொருளாதார சிக்கல்கள், சாதி சமய வேறுபாடு, குடும்ப உறவுகளின் முக்கியத்துவம், பண்பாட்டு சீரழிவுகளை சமூக எதார்த்தத்துடன் சித்தரிக்கிறது. இந்நாவலில் வரும் **ரேவதி** காதலித்து திருமணம் செய்து கொண்டாள். தன் தந்தையின் சம்மதம் இன்றி மணமுடித்ததால் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகி இறுதியில் உயிரையே விடுகிறாள். அன்பு மற்றும் உறவுகளை விட பணம் உயர்வல்ல என்பதையும் பாசம் என்பது காலம் கடந்து நிற்பது அல்ல என்பதையும் உணர்த்தும் வகையில் இந்நாவல் படைக்கப்பட்டுள்ளது.

**கிராம வாழ்க்கை**

கிராம வாழ்க்கை என்பது இயற்கையோடு இயைந்த வாழ்க்கையாகும். விவசாயம் மற்றும் நெருக்கமான சமூக உறவுகள், நிதானமான, அமைதியான வாழ்க்கை முறையாகும். இது பெரும்பாலும் கூட்டுக் குடும்ப அமைப்பு கலாச்சாரப் பழக்கவழக்கங்கள் மற்றும் எளிமையான

நடைமுறைகளை உள்ளடக்கியது. மக்கள் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்து ஒற்றுமையுடன் பழகும் நெருக்கமான சமூக கட்டமைப்பு. இத்தகைய கிராமப்புற வாழ்க்கை என்பது நகர்புறங்களை விட நிதானமான மன அழுத்தம் மற்ற வாழ்க்கை முறையாகும்.

இந்த வகையில் ஆசிரியர் இமயத்தின் நாவல்கள் பெரும்பாலும் கிராமப்புற வாழ்க்கையை மையப் படுத்தியே எழுதப்படுபவனாகும். கிராமத்தில் இடம்பெறக்கூடிய பிரச்சனைகளை தன்னுடைய நாவலில் மிகவும் நுணுக்கமாக சித்தரித்துள்ளார்.

**செல்லாதபணம்'** நாவலின் கிராமப்புறங்களில் இன்றளவும் மக்கள் சந்திக்கக்கூடிய சாதி சமய வேறுபாடுகள், குடும்பச் சூழல், வறுமை, பொருளாதார ஏற்றதாழ்வுகள், காதல் சிக்கல்கள், கல்வி அறிவு, ஆணாதிக்கம், வர்க்க வேறுபாடு போன்றவற்றை எல்லோரும் புரிந்து கொள்ளும் வகையில் தன்னுடைய நாவலில் படம் பிடித்து காட்டியுள்ளார்.

**குடும்பச்சூழல்**

**'குடும்பம்'** என்பது கணவன், மனைவி, குழந்தை கள், தந்தை, தாய், உடன் பிறந்தோர்கள் ஆகியோரை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது. இவர்களிடம் ஏற்படும் அன்பு பிணைப்பே குடும்பம் நன்னெறியில் செல்ல காரணமாகிறது. கணவன், மனைவி, பிள்ளைகள் எனும் கூட்டு முயற்சியே குடும்பமாக உருவெடுக்கிறது.

**'நல்லறமாவது இல்லறமே'** என்ற திரு.வி.க. வின் ஒரு உன்னதமான வரிகள் இல்லறத்தின் சிறந்த மாண்பினை உணர்த்தும். இல்லறத்தில் இன்பமுற்று வாழும் தாய், தந்தையின் அன்பில் பிறக்கக்கூடிய குழந்தை,

**"பெரிது பெரிது பிள்ளைப்பேறு**

**பிள்ளை பெற்றால் உள்ளம் வளரும்"**[1]

இதையே திருவள்ளுவர் திருக்குறளின் மக்கள் பேறு என்ற அதிகாரத்தில்,

**"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த**

**மக்கள் பேறு அல்ல பிற"**[2]

தான் பெறுகின்ற செல்வங்களும் ஒருவன் அறிவுடைய மக்களை பெறுவதை காட்டிலும் சிறந்ததாக பிற எதையும் நாம் கருதுவதில்லை.

இத்தகைய மக்கட் செல்வத்தை பெறுவது மட்டுமல்லாமல் அவர்களுக்கு சிறந்த ஒழுக்க நெறிகளை கூறி நல்ல அறவழியில் வளர்த்தல் வேண்டும். இதையே **செல்லாத பணம்** என்ற நாவலில் வரும் நடேசன் தன் இரு பிள்ளைக ளையும் ஒழுக்கத்துடன் வளர்த்து நல்லதொரு கல்வி அறிவுடன் திகழச் செய்தார். இவரின் மகன் முருகன் தந்தையின் வழியில் அவர் தன் மனம் கோணாமல் வாழ்வில் உயர்ந்த நிலை அடைந்து நல்வாழ்வு வாழ்ந்து வந்தான். இவருடைய மகள் ரேவதி தன்னுடைய வாழ்க்கைத் துணையை தானே தேர்ந்தெடுத்து தந்தையின் விருப்பமில்லாமல் திருமணம் செய்து கொள்ள நினைக்கிறாள். இதை தெரிந்து கொண்ட நடேசன் ரேவதியிடம் பக்குவமாக இதெல்லாம் நமது குடும்பத்திற்கு ஒத்து வராத செயல் என கூறினார், அவர் கூறுவதை,

**"நான் பேசிப்பாக்குறன், என் வார்த்தைக்கு**

**மதிப்பு கொடுக்கும்"**[3]

இன்று தன் மகளின் மீது கொண்ட நம்பிக்கை யால் சொல்கிறார். நடேசன் ரேவதியிடன் மீது அதிக அன்பினை வைத்துள்ளார். ஆகையால் ரேவதியிடம்,

**நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மையா?**[4] என்று கேட்டார்.

**உண்மையா இருந்தா கூட பரவாயில்ல,**

**எங்க வீட்டில பிரச்சனையாவுது, எனக்கு**

**வேற மாப்ள பார்த்திட்டாங்கன்னு நல்லத்தனமா**

**சொல்லிடு, பிரச்சனை முடிஞ்சிடும்**[5]

இவ்வாறு நடேசன் பேசுவதை காண முடிகிறது.

**பெரிய தப்பா நீ செஞ்சிருக்க மாட்டேன்னு நம்புறன்**

**ஏன்னா நீ என் பொண்ணு"**[6]

என்று ரேவதியிடம் பொறுமையாக கூறுகிறார். தன்னுடைய வளர்ப்பு சரியானது தன் மகள் தன் சொல்லைக் கேட்பாள் என்று நினைத்தார்.

அது மட்டுமல்லாமல்,

**"நான் ஒரு ஹெட்மாஸ்ட்டரு, எம் பொண்ணே**

**இப்பிடி செய்யுதுன்னு தெரிஞ்சா மத்தவங்க**

**என்னெ மதிப்பாங்களா?**

**நீயே எம் பேச்சக் கேக்கல,**

**மதிக்கலன்னா எங்கிட்ட வேல் பாக்குற,**

**வாத்தியாருங், எங்கிட்ட படிக்குற**

**பசங்க எப்பிடி எம் பேச்சைக்**

**கேப்பாங்க? மதிப்பாங்க?**

**வீட்டுல அமைதி போயிடிச்சி தெரியுதா?"**[7]

நடேசன் தன்னுடைய மகளிடம் குடும்பத்தின் மரியாதையும் வேலை பார்க்கும் இடத்தில் தனக்கு இருக்கும் மதிப்பையும் குறித்து பேசுவதை காணமுடிகிறது. தன் தந்தை கூறியதை

பொருட்படுத்தாமல் ரேவதி தான் விரும்பிய ரவி என்பவரை திருமணம் செய்ய முடிவெடுக்கிறாள்.

இதனால், தான் கொண்ட அளவற்ற பாசத்தால் மகளின் முடிவினை எதிர்க்க முடியாமல் **ரேவதி-ரவி** இவர்களுக்கு நடேசன் திருமணம் செய்து வைக்கின்றார்.

தந்தையின் விருப்பமில்லாமலும், குடும்பத்தாரின் சம்மதம் இன்றியும் அவள் செய்த காதல் திருமணத்தில் பல இன்னல்களையும், துன்பங்க ளையும் சந்திக்கின்றாள். ரவியின் குடும்பம் பர்மாவில் இருந்து வந்தவர்கள். அடித்தட்டு வாழ்க்கை வாழும் ரவி, ஒரு ஆட்டோ ஓட்டுனர், குடிப்பழக்கமும் உடையவன். தினம் தினம் இவன் குடித்துவிட்டு ரேவதியை அடித்து உதைத்து சித்திரவதை செய்து வந்தான்.

இதை அனைத்தும் தெரிந்த நடேசனும், முருகனும் தெரிந்தும் தெரியாததும் போல் இருந்தனர். ஒரு பெண்ணானவள் தான் பிறந்த வீட்டில் எவ்வாறு வாழ்கிறாள் என்பதையும் தான் விரும்பி ஏற்கும் வாழ்க்கையில் படும் துன்பங்களையும் இந்நாவலின் வழி அறிய முடிகிறது.

**வறுமை**

**செல்லாத பணம்** நாவலில் **வறுமை** என்பது வெறும் பசி மட்டுமல்லாது, கிராம வாழ்க்கையில் இருக்கிற சமூக ஏற்றத்தாழ்வு, பொருளாதாரம் மற்றும் உறவு முறைகளில் ஏற்படும் பிளவு, இது மட்டுமல்லாமல் வறுமை என்பது ஒரு குடும்ப அமைப்பையே சீர்குலைக்கும் தன்மையினைக் கொண்டதாகவும் சுட்டிக்காட்டுகிறது.

ரவியின் குடும்பம் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள். தினமும் ஆட்டோ ஓட்டினால் தான் பிழைக்கவே முடியும் என்ற நிலையில் தான் உள்ளனர். இதில் சிக்கிக்கொண்ட ரேவதி தனது இருகுழந்தைகளையும் வைத்துக்கொண்டு மிகவும் துன்பப்படுகிறாள். ஊரை சுற்றி ரவி வாங்கி வைக்கும் கடனை அடைக்க தன் தாய் அமராவதியிடம் பணத்தை வாங்கி கடனை அடைப்பதே வேலை இவளுக்கு.

நடேசன் சுத்தமாகவே ரேவதியை ஒதுக்கிவிட்டான். அவளது தாய் மட்டுமே பேசிக் கொண்டிருந்தாள். ஏனென்றால் ஒரு பெண் தாயிடம் மட்டுமே மனம் விட்டு பேசுவாள் அதனால் ரேவதி தன் தாயிடம் தனது கவலைகளை கூறி பலமுறை கடனுக்காக பணத்தினை வாங்கி கொடுத்ததும் உண்டு.

இந்த வறுமையோடும் பல துன்பங்களுடனும் வாழ்ந்து கொண்டு இருக்கிறாள் வறுமை என்பது மிகவும் கொடியது இதனைத் தான் வள்ளுவர்,

**இன்மையின் இன்னாதது யாதெனின்**

**இன்மையின்**

**இன்மையே இன்னா தது**[8]

வறுமையைப் போல் துன்பம் ஆவது எது என்று கேட்டால், வறுமையைப் போல் துன்பமாவது வறுமை ஒன்றே என விளக்கம் அளிப்பதை காணப்படுகிறது.

வள்ளுவர் கூறுவதைப் போல வறுமை தரும் வலி என்னவென்று **பாவேந்தர் பாரதிதாசனும்** நமது கண் முன் காட்சிப்படுத்துகிறார்.

**கந்தை அணிந்தோம் -இரு கையே**

**விரித்தெங்கள் மெய்யினைப் போர்த்தோம்**

**மொந்தையர் கூழைப்- பலர்**

**மொய்த்துக் குடித்துப் பசித்துக் கடந்தோம்**[9]

இதை போலவே வள்ளுவ பெருந்தகையும், நெருப்பில் கூட கண்மூடி தூங்கி விடலாம் ஆனால் வறுமை வசப்பட்டவன் தூங்கவே முடியாது என்பதனை,

**நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்**

**யாதொன்றும் கண்பாடு அரிது**[10]

கூறுகிறார். இவ்வாறு பல்வேறு இலக்கியங்களிலும் கவிதைகளிலும் வறுமை எத்தன்மையை கொண்டது என்பதனை ஆராய்ந்து நம்மால் பார்க்க முடிகிறது

ரவியை திருமணம் முடித்த நாளிலிருந்து அவள் பல இன்னல்களையும் பல துன்பங்களையும் அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறாள். தன்மகள் படும் துன்பத்தை தந்தை கண்டும் காணாமல் இருப்பதை நம்மால் இதன் மூலம் உணரமுடிகிறது. தன் தாயிடம் பணத்தை வாங்கி வாங்கி ஒரு கட்டத்தில் வாழ்க்கையின் மீது வெறுப்பையும் வாழ்க்கையை வெறுத்து அவள் இனி எதற்காக நம்ம வாழ வேண்டும் என்ற முடிவினை எடுக்கிறாள். ரவி நன்றாக வேலை பார்க்கும் ஒரு ஆண் கிடையாது அவனிடம் சொல்லிக் கொள்ளும் அளவிற்கு நல்ல பழக்க வழக்கங்களும் கிடையாது எதை நம்பி இவள் அவனை காதலித்தான் என்பதே தெரியவில்லை ஒரு வார்த்தையினால் காதலில் விழுந்து இன்று வாழ்க்கையில் தவறி விழுந்து விட்டால் ரேவதி .

ரேவதி திருமணம் முடித்த நாளிலிருந்து ரவி திருந்துவதாக தெரியவில்லை . பல இடங்களில் கடன் வாங்கி வைத்து வாழ்க்கையை நடத்துகிறான். இவ்வாறு கடனுக்காக தாயிடம் பணத்தைக் கேட்டு வாங்கி அடைத்துக் கொண்டிருந்த இறுதியாக ஆட்டோவை வைத்து பணத்தை வாங்குகிறான் அதற்காக தன் தாயிடம் முப்பதாயிரம் ரூபாய் வாங்கி வருகிறாள். இதை ரவியிடம் கொடுத்து ஆட்டோவிற்கு கட்ட

வேண்டும் என்று கூறுகிறாள் ஆனால் அவன் பணத்தை கொடுத்தானா என்று தெரியவில்லை ஆனால் குடித்துவிட்டு வீட்டிற்கு வந்து ரேவதியிடம் பலவாறு பேசி அடித்து உதைத்து துன்புறுத்துகிறான். இதனால் வேதனைக்கு உள்ளாகிய ரேவதி இனி ஏன் வாழவேண்டும் என எண்ணினாள் போல உடனே தீ குளித்து விட்டால்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாள். தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. அங்கு இரு குடும்பத் தாரும் ஒருவரை ஒருவர் மாறிமாறி குற்றம் சொல்லி பேசிக் கொண்டே இருந்தனர்.

ரவிக்கு சொல்லிக் கொள்ளும் அளவிற்கு நல்ல குணங்களும் அவனுக்கு இல்லை என்பதை அவனின் தாய் மருத்துவமனையில் கூறுவதன் மூலம் நம்மால் உணர முடிகிறது

**படிக்கவச்சன், படிக்காம சுத்தப்போன,**

**துணிக்கடைக்கு வேலக்குப் போவச் சொன்னன்**

**அப்பன் கூட சேர்ந்துகிட்டு லாட்டரிச்சீட்டு விக்கப் போன**

**பர்மா பஜாருக்குப் போ, நாங்களும் வந்திடுறமின்னு சொன்னன்**

**அதக் கேக்காம ஆட்டோ தான் ஓட்டுவன்னு சொல்லி**

**அடம்புடிச்ச, ஆட்டோ ஓட்ட போன**

**எடத்தில, ஆட்டோ ஸ்டேண்டுல தெனம் நூறு**

**சண்டயக் கொண்டாந்த, செஞ்ச தப்பெல்லாம்**

**போதாதின்னும் இந்தப் பொண்ணப் புடிச்ச**[11]

இதன் மூலம் ரவியின் நிலை இல்லாத குணங்களை நம்மால் தெரிந்து கொள்ள முடிகிறது. பெரும்பாலும் படித்த பெண்கள் மன தைரியசாலியாகவே இருப்பார்கள் ஆனால் இந்நாவலில் வரும் ரேவதி கிராமத்தில் வளர்ந்த பெண் என்பதால் ஒரு கட்டுப்பாட்டிலேயே இருந்துள்ளார். இதனால் தான் வறுமையில் வாடினாலும் ரவியிடம் இருந்து ஒரு துணிச்சலான முடிவினை அவளால் எடுக்க முடியவில்லை

தன்மகள் பொருளாதாரத்தில் நலிவுற்று வறுமை யில் வாடுகின்றாலே நம்மால் ஆன உதவியை செய்து தன் மகளின் துயரினை துடைக்க மனம் வராமலும் திருமணத்திற்கு பின் ரேவதியும் பேசுவதை நிறுத்திக் கொண்டார் நடேசன் இவர் நினைத்திருந்தால் அவளின் துன்பங்களை சரி செய்து ஒரு வறுமையற்ற வாழ்க்கை வாழ வைத்திருக்க முடியும் ரேவதி பல இன்னல்களைக் கடந்து வாழ்க்கை என்னை வெறுத்து தீக்குளித்த இறக்க மாட்டாள் மருத்துவமனையில் நடேசன் மருத்துவமனிடம் லட்சக்கணக்கான பணத்தையும் நகைகளையும் மேசையில் வைத்து என் மகளை எப்படியாவது காப்பாற்றிக் கொடுங்கள் சார் என்று கூறுவதை,

**“கைப்பையில் வைத்திருந்த பணக்கட்டுகளை எடுத்து**

**மருத்துவரின் மேசை மீது வைத்தார்”**[12]

நடேசன் எப்படியாவது தன் மகளை காப்பாற்றுங்கள் என்று கூறுகிறார்.

இதையே தான் அமராவதியும் மருத்துவரிடம் சொல்கிறாள்,

**ஒரு பெரிய வீடு இருக்கு, மூணு காலி மனை இருக்கு**

**வீட்டுல முப்பது நாப்பது பவுன் நகை இருக்கு**

**எல்லாத்தயும் விந்துத் தர்றன் ,**

**எம் பொண்ண உசுரோட கொடுங்க சார்**[13]

ரேவதியின் தாய் மருத்துவரிடம் இவ்வாறு கூறுவதை நம்மால் காண முடிகிறது.

பணத்தினை எவ்வளவு தான் மருத்துவமனிடம் கொடுத்தாலும் ரேவதியை காப்பாற்ற முடியாது என்பதே உண்மை இதை மறைமுகமாக டாக்டர் கூறுவதை,

**இதை எல்லாத்தயும் எடுத்து உள்ள வைங்க,**

**இதுக்கெல்லாம் இங்கு அவசியமில்லை,**

**காசுக்காக இங்கு வைத்தியம் செய்றதில்ல**[14]

**என்பதை** நடேசனிடம்,

**தளர்வான குரலில்,**

**இந்த நிமிஷத்தில இதுக்கெல்லாம்**

**எந்த அர்த்தமும் இல்ல, இப்ப இந்த**

**‘பணம்’ செல்லாது**[15]

ரேவதியின் நிலையை மறைமுகமாக கூறிவிட்டு சென்றதிலிருந்து உண்மை நிலை என்ன என்பதனை அறிய முடிகிறது. வறுமை ரேவதியின் உயிரையே பறித்துக் கொண்டது. இதற்கு இரு குடும்பத்தினருமே காரணம் என்பதனை சொல்லாமல் சொல்லி இருப்பார் நாவலாசிரியர் இமையம்.

**சாதி வேறுபாடு**

இமையம் குடும்பம் என்னும் அமைப்பு சாதியை கட்டிக்காக்கும் ஒரு கருவியாக உள்ளது. கல்வி, பொருளாதாரம், சமூக அந்தஸ்து இவைகளை தாண்டி உயர்ந்த சாதி என கருதப்படும் குடும்பத்தை சேர்ந்த படித்த பெண் ரேவதி பர்மாவிலிருந்து வந்த அகதியும் ஆட்டோ ஓட்டுநருமான ரவியை காதலித்து குடும்ப எதிர்ப்பினை மீறி திருமணம் செய்வதை சுட்டிக்

காட்டுகிறார்.

கிராமத்தில் உயர்ந்த சாதி என்று சொல்லக்கூடிய மிகவும் வசதி வாய்ந்த குடும்பத்தில் பிறந்த பெண் ரேவதி. கிராமப்புறங்களில் இன்றளவும் சாதியின் ஆதிக்கம் அதிகமாக தான் உள்ளது. சாதி விட்டு சாதி திருமணம் செய்வதை கலப்பு மனம் என்கிறோம் ஆனால் அம்மணத்தை சமுதாயம் ஏற்பதில்லை. ரேவதியின் காதலை தெரிந்து கொண்ட அவளின் தாய் கேட்பதை இங்கு நம்மால் காண முடிகிறது,

**யாரடி அவன்? ஊருக்கெல்லாம் தெரிஞ்சிருக்கே**

**என்ன ஊரு ?என்று பலமுறை கேட்ட பிறகுதான்**

**வாயை திறந்தால், 'பர்மா'**

**பர்மாவுல வேல பார்க்கிறானா?**

**"என்ன சாதி?"**

**"அகதி"**

**"அகதியா?" என்று கேட்ட அமராவதியின்**

**குரலில் அவ்வளவு இளக்காரம் இருந்தது.**[16]

அமராவதி கேட்பதை காண முடிகிறது இன் ஆவலில் வரும் ரேவதி ரவி இருவரும் வேற சாதி வகுப்பு சேர்ந்தவர்கள் சாதி வேறுபட்டு திருமணம் செய்வது என்பது

மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் தெய்வங்களும் கலப்பு மனிதனை செய்தனர் என்பதனை,

**கலப்பு மணம் செய்துதிட்ட**

**கடவுளரை ஏற்கின்றீர்**

**கலப்பு மனம் நமக்குகளனில்**

**கடுகடுத்து வேர்க்கின்றீர்**

**அரக்கன் மகள்........**[17]

என்ற கவிதை வரிகளில், சிவபெருமானை மணமுடித்த பார்வதி தாட்சன் என்ற அரக்கனின் மகள் என்பதையும், குமரனை மணந்த வள்ளி வேட்டுவர் குலத்தைச் சார்ந்த குறத்தி மகள் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். அவர்கள் திருமணத்தை ஆதரித்த அடியவர்கள் மக்கள் செய்த கலப்பு மணத்தை வெறுப்பது ஏனோ? என்கிறார்,

**கடவுளர்களை**

**வாழ்வித்த காதலை**

**ஏற்கின்றீர்**

**உடலுக்குச்**

**சாதி நிறம்**

**உருவேற்றிப் புதைக்கின்றீர்**[18]

என்னும் அடிகள் உடலுக்குச் சாதி பார்த்து உயர்ந்தோர் தாழ்ந்தோர் என தரம் பிரித்து கடவுளர்கள் வாழ்வித்த காதலை ஏற்கும் சமுதாயம் சாதியை உருவேற்றி புதைப்பதேனோ? என்கிறார் கவிஞர். ரேவதி வேறு சாதியச் சேர்ந்த ரவியை திருமணம் முடித்து வாழ்ந்த வாழ்க்கை என்பது தீயில் கருகிபோனது என்பதனை

**செல்லாத பணம்** நாவல் எடுத்துரைக்கிறது.

**காதல் நிலை**

காதல் என்பது காதுக்கினிய சொல் கருத்துக்கினிய பொருள் காதல் உண்டாகி இவ்வுலகில் எல்லாம் உண்டு காதல் இல்லை ஏன் ஒன்றும் இல்லை என்பதனை,

**"காதல், காதல், காதல் -இன்றேல்**

**சாதல் சாதல் சாதல்"**[19]

எனப் பாடினார் பாரதியார். ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே மலரும் அன்பானது காதல் என்று கருதத்தக்கது

**காதல் – விளக்கம்**

காதல் என்ற சொல் ஆண், பெண் என்றும் இரு பாலரிடையே உள்ள அன்பையே பெரும்பாலும் குறிக்கின்றது. காதலன் என்றால் கணவன். காதலி என்றால் மனைவி, இவ்விருவரையும் இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடைபெறச் செய்வதும், காதல் கண்ணிரண்டும் ஒன்றையே காண்பது போல இல்வாழ்க்கையில் ஈடுபட்ட இருவரையும் ஒரு வெளிப்படுத்துவது காதல். இதனையே,

**"காதல் மனையாளும் காதலனும் மாறின்றித்**

**தீதில் ஒருகருமம் செய்பவே -ஓதுகலை**

**எண்ணிரண்டும் ஒன்றுமதி என்முகத்தாயி
போக்குமா லவ்**

**கண்ணிரண்டும் ஒன்றையே காண்."**[20]

இவ்வாறு காதலைப் பற்றி கூறுகிறார் கவிஞர்.

காதல் என்பதனை பல இலக்கியங்கள் விளக்கியுள்ளது போலவே இந்த **செல்லாதபணம்** நாவலிலும் காதல் என்ற ஒன்றுதான் மையக் கருவாக உள்ளது. ரேவதி நாவலில் வரும் முக்கிய கதாப்பாத்திரம் ஆட்டோ ஓட்டும் பர்மா அகதியான ரவியை காதலிக்கின்றாள். இவர்கள் இருவரும் இலக்கியங்கள் காணப்படும் காதலர் போல இல்லை என்பதே உண்மை.

**"ரேவதியும் ரவியும் இலக்கியங்கள் கண்ட**

**லட்சியக் காதலர்கள் அல்ல"**[21]

என்பது மட்டுமே நாவலைப் படிக்கும் நமக்கு புலனாகிறது.

குடும்பத்தை பொருட்படுத்தாது காதல் மட்டுமே முக்கியம் என்று அவனை திருமணம் செய்ய முடிவெடுக்கிறாள். அவ்வாறு அவள் முடிவெடுக்க காரணத்தை மருத்துவமனையில் தன் தாயான அமராவதியிடம் பேசுவதை நம்மால் காண முடிகிறது.

**மூணு நாளு தான் அவன் என்னெப் பார்த்திருப்பான்.**

**எப்பிடித்தான் எம் பேரு தெரிஞ்சிதோ, நாலாம் நாளே எம் பேர**

**.................. நான்லூசு ”[22]**

என கூறுகிறாள். இந்நாவலில் வரும் ரேவதி நன்கு படித்த பெண். ரவி படிப்பில் சற்று குறைந்தவன் ஆட்டோ ஓட்டுபவன் இவனின் வசை மொழிகளை கேட்டு தன்னிலை மறந்து தனக்காக ஒருவன் உயிரையும் விட துணிகிறான் என்றால் அது உண்மையான காதல் என்று ஏமாறுகிறாள். ரேவதி குடும்பத்தின் எதிர்ப்புகளை மீறி ரவியை மணமுடிக்கிறாள். அங்கும் அவளுக்கு நிம்மதியான வாழ்க்கை இல்லை காதல் என்பது திருமணத்தில் மட்டுமல்லாமல் அந்த திருமண வாழ்க்கை எவ்வாறு வாழ்கிறோமோ அதை வைத்து தான் காதல் வெற்றியடைகிறது. இவ்வாறு பல்வேறு கோணங் களில் ஆசிரியர் இமையம் இந்நாவலைப் படைத்துள்ளார்.

## முடிவுரை

**சொல்லாத பணம்** என்ற நாவலில் வரும் ரேவதி உயர்ந்த குடும்பத்தில் பிறந்த பெண். கல்வியறிவு பெற்றவள், ஆனால் சற்றும் சிந்திக்காமல் ஆட்டோ ஓட்டுநர் ரவியை காதலித்து பெற்றோர் சம்மதம் இல்லாமல் மணமுடிகின்றாள். அதனால் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகின்றாள். தன் பேச்சை கேட்காமல் மணமுடித்ததால் இவளின் தந்தை இவளை வெறுக்கின்றார். பெண்ணின் ஒழுக்கம் மீறிய செயலால் அவளுடைய குடும்பத்தில் நிம்மதி என்பது இல்லாமல் போயிற்று. இநநாவலில் கிராமத்தில் பிறந்த பெண்ணிற்கு மனதைரியம் என்பது சற்று குறைவாக காண்பித்துள்ளார் வாழ்க்கையில் என்ன பிரச்சனைகள் வந்தாலும் சரி செய்து கொள்ளும் மனபக்குவம் விட்டு வெளியேறு துணிச்சலும் இன்றைக்கு நகர்ப்புறங்களில் வாழும் பெண்களுக்கு உண்டு ஆனால் கிராமப்புறங் களில் வாழும் பெண்கள் மன உறுதி இல்லாமல் இருப்பதையே நம் கண்முன் காட்சிப்படுத்துகிறார்.

## சான்றெண் விளக்கம்


1. திரு.வி.கல்யாணசுந்தரனார் - பெண்ணின் பெருமை
2. டாக்டர் வ.சுப. மாணிக்கனார் -திருக்குறள்
3. இமையம் , செல்லாத பணம் – பக-8
4. மேலது
5. மேலது
6. மேலது
7. இமையம், செல்லாத பணம் பக்-9
8. டாக்டர் வ.சுப.மாணிக்கனார் – திருக்குறள் 1041
9. பாரதிதாசன் கவிதை தொகுதி -1 ( தொழிலாளர் விண்ணப்பம்)
10. வ.சுப. மாணிக்கனார் திருக்குறள் 1049
11. இமையம், செல்லாத பணம் – பக் 41
12. இமையம், செல்லாத பணம்- பக் 61
13. மேலது
14. மேலது
15. மேலது
16. இமையம், செல்லாத பணம் பக்-5
17. மலர் மகன் கவிதைகள் பக்-72
18. மேலது பக் 73
19. மகாகவி பாரதியார்,குயில் பாட்டு, மூலமும் உரையும், பக்-69
20. சுந்தர சண்முகனார் நன்னெறி நயவுரை, பாடல் -6
21. இமையம், செல்லாத பணம் பக்-206.
22. இமையம், செல்லாத பணம் பக்- 218.


## துணை நூற்பட்டியல்


1. தமிழ்த்தென்றல் திரு.வி.கல்யாணசுந்தரனார் – பெண்ணின் பெருமை மற்றும் வாழ்க்கைத் துணை, சாரதா பதிப்பகம், சென்னை-600014
2. டாக்டர்.வ.சுப.மாணிக்கனார்- திருக்குறள் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை -600014
3. பாவேந்தர் பாரதிதாசன் கவிதை தொகுதி-1 - தொழிலாளர் விண்ணப்பம், பூம்புகார் பதிப்பகம், எண் 125, பிரகாசம் சாலை, பிராட்வே, சென்னை-600108.
4. மகாகவி பாரதியார்- குயில் பாட்டு மூலமும் உரையும், கௌரவ பதிப்பகம், பாரி நிலையம், சென்னை-600001